**செய்தி வெளியீடு எண் : 1398** **நாள் : 23.12.2021**

# செய்தி வெளியீடு

2022–ஆம் ஆண்டு தைப் பொங்கலை சிறப்பாகக் கொண்டாடும் வகையில் கீழ்க்காணும் 20 பொருட்கள் அடங்கிய பொங்கல் பரிசுத் தொகுப்பினை, அரிசி குடும்ப அட்டைதாரர்களுக்கும் மற்றும் இலங்கைத் தமிழர் மறுவாழ்வு முகாம்களில் வசிக்கும் குடும்பங்களுக்கும் பொங்கல் பரிசுத் தொகுப்பாக வழங்க மாண்புமிகு தமிழ்நாடு முதல் அமைச்சர் அறிவித்துள்ளார்.

| வ. எண் | பொருட்கள் | குடும்ப அட்டை ஒன்றுக்கு வழங்கப்படும் பொருட்களின் அளவு |
|---|---|---|
| 1 | பச்சரிசி | ஒரு கிலோ |
| 2 | வெல்லம் | ஒரு கிலோ |
| 3 | முந்திரி | 50 கிராம் |
| 4 | திராட்சை | 50 கிராம் |
| 5 | ஏலக்காய் | 10 கிராம் |
| 6 | பாசிப்பருப்பு | 500 கிராம் |
| 7 | நெய் | 100 கிராம் |
| 8 | மஞ்சள்தூள் | 100 கிராம் |
| 9 | மிளகாய்த் தூள் | 100 கிராம் |
| 10 | மல்லித்தூள் | 100 கிராம் |
| 11 | கடுகு | 100 கிராம் |
| 12 | சீரகம் | 100 கிராம் |
| 13 | மிளகு | 50 கிராம் |
| 14 | புளி | 200 கிராம் |
| 15 | கடலைபருப்பு | 250 கிராம் |
| 16 | உளுத்தம்பருப்பு | 500 கிராம் |
| 17 | ரவை | 1 கிலோ |
| 18 | கோதுமை மாவு | 1 கிலோ |
| 19 | உப்பு | 500 கிராம் |
| 20 | துணிப்பை | ஒன்று |

மேற்கூறிய 20 பொருட்கள் அடங்கிய பொங்கல் பரிசுத் தொகுப்புடன், கூடுதலாக கரும்பும் சேர்த்து வழங்கவும், மாண்புமிகு தமிழ்நாடு முதல் அமைச்சர் ஆணைகள் வழங்கியுள்ளார்.

இவற்றின் அடிப்படையில் பொங்கல் பரிசுத் தொகுப்பு வழங்குவது தொடர்பாக பின்வரும் அறிவுரைகள் மண்டல இணைப்பதிவாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

**பொங்கல் பரிசுத் தொகுப்பு:**

பொங்கல் பரிசுத் தொகுப்பில் குறிப்பிடப்பட்டுள்ள பொருட்களில், முந்திரி, திராட்சை, ஏலக்காய் மற்றும் கரும்பு தவிர்த்து ஏனைய பொருட்கள் அனைத்தும் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் மூலம் கொள்முதல் செய்யப்பட்டு, தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகக் கிடங்குகளில் இருந்து நியாய விலைக்கடைகளுக்கு நகர்வு செய்யப்பட வேண்டும்

குடும்ப அட்டைதாரர்களுக்கு பொங்கல் பரிசுத் தொகுப்பு வழங்குவதற்கு தேவையான முந்திரி 50 கிராம், உலர் திராட்சை 50 கிராம் மற்றும் ஏலக்காய் 10 கிராம் உள்ளடக்கிய தொகுப்பு மற்றும் முழுக்கரும்பு ஆகியவற்றை கூட்டுறவுச் சங்கங்கள் தாம் நடத்தும் நியாய விலைக்கடைகளுக்கு தேவைக்கேற்ப கொள்முதல் செய்து கொள்ள வேண்டும்.

இவற்றுடன் மண்டலங்களில் உள்ள தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக்கழம், சுய உதவிக்குழுக்கள், இதர கூட்டுறவு சங்கங்கள் மற்றும் மகளிரால் நடத்தப்படும்

நியாயவிலைக்கடைகளுக்கும், பொங்கல் பரிசுத் தொகுப்பு வழங்குவதற்கு தேவையான முந்திரி 50 கிராம், உலர் திராட்சை 50 கிராம் மற்றும் ஏலக்காய் 10 கிராம் உள்ளடக்கிய தொகுப்பு மற்றும் முழுக்கரும்பு ஆகியவற்றை கூட்டுறவுச் சங்கங்கள் மூலமே கொள்முதல் செய்து வழங்கவேண்டும். இதற்கான ஏற்பாடுகளை சம்பந்தப்பட்ட மண்டல இணைப்பதிவாளர்கள் செய்துகொள்ள வேண்டும்.

**<u>தகுதியுள்ள குடும்ப அட்டைகள்:</u>**

அனைத்து அரிசி குடும்ப அட்டைகள் மற்றும் முகாம்களில் வசிக்கும் இலங்கைத் தமிழர்கள்

**<u>தேவைப்பட்டியல்:</u>**

அனைத்து மண்டல இணைப்பதிவாளர்களும் தங்கள் மண்டலத்தில் தகுதியுள்ள குடும்ப அட்டைகளின் பட்டியலை மாவட்ட வழங்கல் அலுவலரிடமிருந்து பெற்று பச்சரிசி, சர்க்கரை, துணிப்பை உள்ளிட்ட 17 பொருட்களை தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக கிடங்குகளிலிருந்து நகர்வு செய்து கொள்ள வேண்டும்.

கரும்பு, முந்திரி, திராட்சை, ஏலக்காய் போன்றவற்றின் தேவையினை கணக்கிட்டு, கூட்டுறவு நியாயவிலைக் கடைகளை நடத்தும் சங்கங்களே கொள்முதல் செய்ய உரிய ஏற்பாடுகள் செய்து கொள்ள வேண்டும்.

**<u>பொங்கல் பரிசுத் தொகுப்பு நகர்வு:</u>**

பொங்கல் பரிசுத் தொகுப்பிற்கு ஒதுக்கப்படும் பச்சரிசி, வெல்லம், பாசிப்பருப்பு, நெய், மஞ்சள்தூள், மிளகாய்த்தூள், மல்லித்தூள், கடுகு, சீரகம், மிளகு, புளி, கடலைப்பருப்பு, உளுத்தம்பருப்பு, ரவை, கோதுமை மாவு, உப்பு மற்றும் துணிப்பையினை தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக கிடங்குகளிலிருந்து நியாயவிலைக் கடைகளுக்கு சிறப்பு ஏற்பாடு மூலம் நகர்வு செய்து முடிக்கப்பட வேண்டும்.

கூட்டுறவு சங்கங்கள் மூலம் கொள்முதல் செய்யப்படும் கரும்பு, முந்திரி, திராட்சை மற்றும் ஏலக்காய் போன்றவை தரமாக உள்ளதையும், குடும்ப அட்டைதாரர்களுக்கு வழங்கப்படும் பொங்கல் பரிசுத் தொகுப்பின் தரம் மற்றும் எடை அளவு சரியாக உள்ளதையும் அனைத்து மண்டல இணைப்பதிவாளர்களால் உறுதி செய்ய அறிவுறுத்தப்படுகிறது.

**<u>பொட்டலமிடுதல்:</u>**

கூட்டுறவு சங்கங்கள் தங்களின் நியாயவிலைக் கடைகளில் உள்ள குடும்ப அட்டைதாரர்களுக்கு வழங்க தேவையான முந்திரி, திராட்சை மற்றும் ஏலக்காய் கொள்முதல் செய்யப்பட்டு, அதனை பயனாளிகளுக்கு உரிய நேரத்தில் வழங்க வேண்டி முந்திரி (50 கிராம்), திராட்சை (50 கிராம்) மற்றும் ஏலக்காய் (10 கிராம்) அளவு கொண்ட பொட்டலங்களாக தயார் செய்து

வைத்துக்கொள்ள வேண்டும். **பொட்டலமிடும்போது நெகிழி (Plastic) பயன்படுத்தப்படுவதை கண்டிப்பாக தவிர்க்க வேண்டும்.** பொட்டலங்கள் பழுப்பு நிற காகித உறைகளில் (brown paper cover) மட்டுமே தயாரிக்கப்பட்டு, விநியோகம் செய்வதை உறுதி செய்ய வேண்டும்.

**<u>விநியோகம்:</u>**

பொங்கல் பரிசுத் தொகுப்பினை குடும்ப அட்டைதாரர்களுக்கு வழங்க வேண்டிய நாட்கள் விவரம் பின்னர் தெரிவிக்கப்படும். நாள் அறிவிக்கப்பட்டதும், குறிப்பிட்ட நாளிலிருந்து அனைத்து நியாயவிலைக் கடைகளிலும், பொங்கல் பரிசுத் தொகுப்பு, விநியோகம் செய்யப்பட வேண்டும். மாவட்டத்தில் பொங்கல் பரிசுத் தொகுப்பு வழங்கும் விழாவிற்காக பொங்கல் பரிசுத் தொகுப்பினை நியாயவிலைக் கடைகளில் வழங்காமல் நிறுத்தி வைத்து காலம் தாழ்த்தக் கூடாது.

மேலும், பொங்கல் பரிசுத் தொகுப்பினை நிர்ணயிக்கப்பட்ட தேதி முதல் குடும்ப அட்டைதாரர்களுக்கு விநியோகம் செய்ய ஏதுவாக பொங்கல் பரிசு தொகுப்பு வழங்கும் தேதிக்கு முன்னர் பொருட்கள் அனைத்தும், அனைத்து நியாயவிலைக் கடைகளுக்கு சென்றடைவதை தொடர்புடைய மண்டல இணைப்பதிவாளர்கள் உறுதி செய்து கொள்ள வேண்டும்.

**<u>கொரோனா தொற்று ஏற்படாமல் பாதுகாப்பான விநியோகம்</u>**

- பொங்கல் பரிசுத் தொகுப்பு ஒரே தவணையில் வழங்குவதற்கு ஏதுவாக இருப்பு வைத்து கொள்ள வேண்டும். அவ்வாறே ஒரே தவணையில் குடும்ப

அட்டைதாரர்களுக்கு நியாயவிலைக் கடைகள் மூலம் விநியோகம் செய்யப்பட வேண்டும்.

- குடும்ப அட்டைதாரர்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட அனைத்து பொருட்களும் சீரான அளவில் குறிப்பிட்ட காலத்திற்குள் கிடங்கிலிருந்து நியாயவிலைக்கடைகளுக்கு நகர்வு செய்யப்பட வேண்டும். எக்காரணத்தைக் கொண்டும் பொருட்கள் இல்லையென குடும்ப அட்டைதாரர்களை திருப்பி அனுப்பக்கூடாது. நகர்வு பணி முறையாக நடைபெற ஒதுக்கீடு கூடுதலாக பெறப்பட்ட நிலையில் கூடுதல் வாகனங்களும், கூடுதல் சுமைத் தூக்கும் தொழிலாளர்களும் போதிய அளவில் இருக்குமாறு முன்கூட்டியே ஏற்பாடு செய்யப்பட வேண்டும்.
- குடும்ப அட்டைதாரர்களுக்கு பொங்கல் பரிசுத் தொகுப்பு விநியோகம் செய்யும் நாட்களில் கடைகள் உரிய நேரத்தில் திறக்கப்படவேண்டும். நியாயவிலைக் கடைகளுக்கு வரும் குடும்ப அட்டைதாரர்கள் ஒருவரோடு ஒருவர் நெருங்கி நிற்பதைத் தவிர்க்கும் விதமாக ஒரு மீட்டர் இடைவெளியில் தனிமைப்படுத்தி சமூக விலகல் (Social Distancing) என்னும் நடைமுறையை தீவிரமாகப் பின்பற்ற வேண்டும்.
- தனிமைப்படுத்தப்பட்டவர்கள் வசிக்கும் இடங்களுக்கு தேவையான பாதுகாப்புடன் நேரில் சென்று பொருட்கள் வழங்கப்பட வேண்டும்.
- தனிமைப்படுத்தப்பட்டவர்கள் உள்ள இடங்களுக்கு செல்லும்போதும், கையுறை, முகக்கவசம் மற்றும் கிருமிநாசினி (Sanitizer) ஆகியவைகளை பயன்படுத்தி பாதுகாப்பான முறையில் சென்று அத்தியாவசியப் பொருட்கள்

வழங்கப்பட வேண்டும். மேலும் இவ்வாறு விநியோகம் செய்யும் போது ஏற்கனவே உள்ள பதிவாளர் கடிதம் மற்றும் ஆணையரின் சுற்றறிக்கையில் கண்டுள்ள அறிவுரைகளை பின்பற்றி விநியோகிக்கப்பட வேண்டும்.

- மாற்றுத்திறனாளிகள், வயது முதிர்ந்தவர்கள். கைக்குழந்தையுடன் வரும் தாய்மார்கள் ஆகியோருக்கு பொங்கல் பரிசுத் தொகுப்பு பெற நியாயவிலைக் கடைகளுக்கு வரும்போது அவர்களுக்கு முன்னுரிமை அளித்து உடன் உரிய பொருட்களை வழங்க வேண்டும்.
- நியாயவிலைக் கடைகளிலுள்ள அனைத்து பணியாளர்களும் தங்களைப் பாதுகாத்துக் கொள்ள ஏதுவாக, உரிய எண்ணிக்கையில் கையுறை, முகக்கவசம், சானிடைசர் ஆகியவைகளை நியாயவிலைக் கடைகளுக்கு விநியோகம் செய்ய வேண்டும்.
- நியாயவிலைக் கடைகளில் உள்ள விற்பனை முனைய இயந்திரம் நல்ல நிலையில் செயல்படுவதையும், குறைபாடுகள் காணப்படின் உடன் சரிசெய்யவும், "விற்பனை முனைய இயந்திரம் செயல்படாததால் பொங்கல் பரிசு வழங்குவதில் தாமதம்" என்ற நிலை எழாது, உடன் சரி செய்யவும், அனைத்து விற்பனை முனைய இயந்திரங்களும் நல்ல நிலையில் இருப்பதை உறுதி செய்ய வேண்டும்.

**<u>குழு அமைத்தல் மற்றும் தினசரி அறிக்கை</u>**

பொங்கல் பரிசுத்தொகுப்பு –2022 திட்டத்தினை சிறப்பாக செயல்படுத்திட, தங்கள் மண்டலத்தில் (சென்னை தவிர) உள்ள அனைத்து வட்டாரங்களுக்கும், கூட்டுறவு சார்பதிவாளர் நிலைக்கு குறையாமல் உள்ள அலுவலர் ஒருவரை

கண்காணிப்பு அலுவலராக நியமித்து, மேற்காணும் அரசாணையின்படி பொங்கல் பரிசுத் தொகுப்பு, நியாயவிலைக் கடைகளில், போதிய அளவு இருப்பு வைக்கப்படுவதையும், அளவு உரிய குடும்ப அட்டைதாரர்களுக்கு விநியோகிக்கப்படுவதையும், மேலும், எவ்வித புகாருக்கும் இடமின்றி இப்பணிகள் மேற்கொள்ளப்படுவதையும் உறுதி செய்ய வேண்டும். மேலும், இதற்கென தேவையான கண்காணிப்பு குழுக்களை ஏற்படுத்தி கண்காணிக்க வேண்டும்.

மேலும், 1,000 குடும்ப அட்டைகள் வரை உள்ள நியாயவிலைக் கடைகளில் இரு பணியாளர்களும், 1,000 குடும்ப அட்டைகளுக்கு மேல் உள்ள நியாயவிலைக் கடைகளில் 3 பணியாளர்களும் இருந்து பொங்கல் பரிசுத் தொகுப்பு வழங்கும் பணியினை மேற்கொள்ள தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். நியாயவிலைக் கடைகள் நடத்தும் கூட்டுறவுச் சங்கங்களில் போதுமான பணியாளர்கள் இல்லாத நேர்வுகளில், இதர கூட்டுறவுச் சங்கங்களின் பணியாளர்களை இப்பணிக்கென நியமித்து நடவடிக்கை மேற்கொள்ளவும் அறிவுறுத்தப்படுகிறது.

மேலும், பொங்கல் பரிசு வழங்குவது தொடர்பான விவரங்கள் தினசரி அறிக்கையாக பதிவாளர் அலுவலகத்திற்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும் எனவும் அறிவுரை வழங்கப்பட்டுள்ளது.

**கட்டுப்பாட்டு அறை அமைத்தல்**

மண்டல இணைப்பதிவாளர் அலுவலகங்களில் இதற்கென கட்டுப்பாட்டு அறை அமைத்து அதற்கென பிரத்தியேக தொலைபேசி எண் ஒதுக்கப்பட்டு, துணைப்பதிவாளர் நிலையில் தொடர்பு அலுவலர் (Nodal Officer) ஒருவரை நியமித்து பொங்கல் பரிசுத் தொகுப்பினை நியாய விலைக் கடைகளின் மூலமாக

அரிசி – குடும்ப அட்டைதாரர்களுக்கு வழங்குவதை தினந்தோறும் கண்காணிக்கவும், பொங்கல் பரிசுத் தொகுப்பு வழங்கப்படும்போது ஏற்படும் பிரச்சனைகளுக்கு உடனுக்குடன் தீர்வு காணப்படவும் வேண்டும். இந்த கட்டுப்பாட்டு அறை தொலைபேசி எண் அனைத்து நியாயவிலைக் கடைகளிலும் ஒட்டப்பட்டு பொதுமக்களுக்கு தெரியப்படுத்த வேண்டும் என மண்டல இணைப்பதிவாளர்களுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

**பொங்கல் பரிசுத் தொகுப்பு வழங்கப்பட்டதற்கான ஒப்புகைப் பதிவேடு:**

பொங்கல் பரிசுத் தொகுப்பினை பெறும் குடும்ப அட்டைதாரர்களின் விவரம், உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறையிடமிருந்து பெற்று, அதற்கென ஒதுக்கப்பட்டுள்ள இடத்தில் கையொப்பம் பெற்றும் அதையே ஒப்புகைப் பதிவேடாக பராமரிக்கவும் உத்தரவிடப்பட்டுள்ளது.

நியாயவிலைக் கடைகளில் குடும்ப அட்டைதாரர்களுக்கு பொங்கல் பரிசுத் தொகுப்பு வழங்கப்பட்டதும், பயனாளிகளின் கைப்பேசிக்கு குறுஞ்செய்தி அனுப்பப்படுவதால், பொங்கல் பரிசுத் தொகுப்பு உரிய பயனாளிகளுக்கு மட்டுமே வழங்கப்படுவதை உறுதி செய்து கொள்ள வேண்டும்.

பொங்கல் பரிசு தொகுப்பினை சிறப்பாக விநியோகம் செய்திட அனைத்து வகையான முன்னேற்பாடுகளையும் செய்திடவும், மாவட்ட ஆட்சித் தலைவர் / மண்டல மேலாளர், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம்/ இணை இயக்குநர் வேளாண்மைத்துறை ஆகியோருடன் ஒருங்கிணைந்து செயல்படவும் மண்டல இணைப்பதிவாளர்களுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

பொங்கல் பரிசுத் தொகுப்பு – 2022 திட்டத்தினை, மேற்காணும் அரசாணையின்படி தொய்வின்றி செயல்படுத்திட கூட்டுறவு சங்கங்களின் இணைப்பதிவாளர்கள் தக்க நடவடிக்கைகளை மேற்கொண்டு, பொங்கல் பரிசுத்தொகுப்பு வழங்குவதில் எவ்வித புகாருக்கும் இடமின்றி, திட்டத்தினை சிறப்பாக செயல்படுத்த உத்தரவிடப்பட்டுள்ளது.

***********

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**